# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● அக்டோபர் 23, 2023 Weekly E-paper ● October 23, 2023





## திராவிட இயக்கத் தமிழர் பேரவையின்
## மாநில செயற்குழு மற்றும் பொதுக்குழுக் கூட்ட முடிவுகள்

## ஊழல் மோடி, ஊழல் அதானி!

தலையங்கம்

## சனாதனத்தைச் சாய்த்த சார்ல்ஸ் டார்வின்(2)

தொகுப்பு : மதிவாணன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● அக்டோபர் 23, 2023 Weekly E-paper ● October 23, 2023


# திராவிட இயக்கத் தமிழர் பேரவையின்
## மாநில செயற்குழு மற்றும் பொதுக்குழுக் கூட்ட முடிவுகள்

### 1) 'இந்தியா வெல்லும்' பரப்புரைப் பயணம் :

இந்திய ஜனநாயகத்தையும், சமூக நீதியையும், மானிட உரிமைகளையும் பாதுகாக்கும் வகையில் இந்தியா வெல்லும் எனும் பரப்புரைப் பயணம் எதிர்வரும் 2024 ஜனவரி பிப்ரவரி மாதங்களில் தமிழ்நாடு தழுவிய அளவில் நடத்துவதென பொதுக்குழு ஒருமனதாக முடிவு செய்கிறது.

### 2) 'நீட் விலக்கு, அதுவே நம் இலக்கு'

தமிழ் நாட்டு மக்களின் ஒட்டு மொத்த விருப்பத்திற்கு எதிராகத் தொடர்ந்து தமிழர்கள் மீது திணிக்கப்படும் நீட் தேர்வை ஒன்றிய அரசு முற்றிலும் அகற்றக் கோரித் திராவிட இயக்கத் தமிழர் பேரவை தொடர் மக்கள் சந்திப்பு இயக்கங்களை நடத்துவது என இக்கூட்டம் ஒரு மனதாகத் தீர்மானிக்கிறது.

### 3) 'ஜாதிவாரிக் கணக்கெடுப்பு' :

திராவிட மாடல் முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தி உள்ளபடி ஒன்றிய அரசு உடனடியாக ஜாதி வாரிக் கணக்கெடுப்பை நடத்திட வேண்டும் என இப்பொதுக்குழு கேட்டுக் கொள்கிறது.

### 4) 'பாலஸ்தீனம் மீதானப் போரை உடனே நிறுத்த வேண்டும்'

ஹமாஸ் இயக்கத்தின் தாக்குதலைக் காரணம் காட்டி, பாலஸ்தீனத்தின் மீது இஸ்ரேல் தொடுத்துள்ள போர் ஜனநாயகத்திற்கும், மனிதாபிமானத்திற்கும் எதிரான இனஅழிப்பு எனக் குற்றம் சாட்டுகிற இப்பொதுக்குழு வரலாற்று உண்மைகளைப் புறம் தள்ளி இந்தியாவின் முந்தைய நிலைப்பாடுகளுக்கு எதிராக பா.ஜ.க. தலைமையிலான இந்திய ஒன்றிய அரசு . இஸ்ரேலின் போர் வெறிக்குத் துணை போவதை இப் பொதுக் குழு வன்மையாகக் கண்டிப்பதோடு, மனிதாபிமானமற்றப் போரை இஸ்ரேல் உடனடியாக நிறுத்துவதற்கு ஐ.நா மன்றம் உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் எனவும் இக் கூட்டம் வலியுறுத்துகிறது.

### 5) " திராவிட முழக்கம் மாத இதழ்"

திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் அதிகாரப்பூர்வ மாத இதழாக "திராவிட முழக்கம் " பேரவையின் தலைவர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு எதிர்வரும் ஜனவரி-2024 இல் வெளியிடுவதென இப் பொதுக்குழு முடிவு செய்கிறது.



## புதிய பொறுப்பேற்கும் பேரவைப் பொறுப்பாளர்கள்

**தலைவர் :** சுப.வீரபாண்டியன்.

**அறிவுரைஞர் குழு:** 1)கயல் தினகரன், 2)ஜெயபால் சண்முகம், 3)தி.க. சுப்பிரமணியன், 4) சிந்தா

**பொதுச் செயலாளர்:** சிற்பி செல்வராஜ்.

**பொருளாளர்:** எழில்.இளங்கோவன்.

**துணைத் தலைவர்கள்:**
1) உமாபதி, 2)ஆ.சிங்கராயர். 3)செல்வின். 4)மகாலட்சுமி.

**துணைப் பொதுச் செயலாளர்கள்:**
1) உமா (வடக்கு மண்டலம்), 2) மரைக்காயர் (கிழக்கு மண்டலம்). 3) காசு. நாகராசு (மேற்கு மண்டலம்) 4) இராம. வைரமுத்து (தெற்கு மண்டலம்)

**தலைமை நிலையச் செயலாளர்:** எட்வின்.

**அமைப்புச் செயலாளர்:** புலேந்திரன்.

**“கருஞ்சட்டைப் பதிப்பக “ இயக்குநர் / வெளியீட்டுப் பிரிவு செயலாளர்:** ‘பெல்’ ராசன்.

**கல்வி உதவி திட்ட இயக்குநர்:**
ஆ.லாரன்ஸ்.

**கொள்கை பரப்புச் செயலாளர்:**
வேடசெந்தூர் இரவி.

**மாநில மாணவரணிச் செயலாளர்கள்:**
1 )நெல்லை பாபு, 2)செங்கொடி.

**இளைஞரணி பொறுப்பாளர்கள்:**
1) சந்தானம், 2)சண்முகவேல் பிரபாகரன்.

**முதன்மைச் செயலாளர்கள்:**
1) மு.மாறன், 2)முத்தையா குமரன்.

## திராவிட முழக்கம்

**ஆசிரியர்:** சுப.வீரபாண்டியன்.

**பொறுப்பாசிரியர்:** குமரன்தாஸ்.
**ஆசிரியர் குழு:** 1) சாரதாதேவி, 2 ) தங்கமங்கை சக்திவேலு, 3 ) வேடசந்தூர் இரவி, 4) மதிவாணன், 5) பேரா.அகிலா, 6) சூலூர் தேவரசன்.










*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## ஊழல் மோடி, ஊழல் அதானி!

லண்டனில் இருந்து வெளியாகும் ஃபைனான்சியல் டைம்ஸ் இதழை மேற்கோள் காட்டி, "கவுதம் அதானி இந்தோனேசியாவில் நிலக்கரியை வாங்குகிறார். அது இந்தியாவை அடையும் நேரத்தில், அதன் விலை இரட்டிப்பாகும். இதன் மூலம், இந்தியாவில் உள்ள ஏழை மக்களின் பைகளில் இருந்து சுமார் ரூ.32,000 கோடி அவர் எடுத்துள்ளார்" என்று ராகுல் காந்தி செய்தியாளர்களிடம் கூறியிருக்கிறார். இந்தியப் பத்திரிகைகளில் இது பெரிதாக வெளியாகவில்லை.

ஏற்கனவே ஹிண்டன்பர்க் அறிக்கையில் அது அதானியின் ஊழல், மோசடிகளைப் புட்டுப்புட்டு வைத்து விட்டு "கார்ப்பரேட் வரலாற்றிலேயே நடந்திராத மிகப் பெரிய மோசடி இது " என்று குற்றம் சாட்டியுள்ளது.

அதானியின் மோசடிகள் தொடர்ந்து வெளியாகிக் கொண்டிருக்கும் நிலையில் அது குறித்து விசாரிக்க இதுவரை பிரதமர் மோடி எந்த முயற்சியும் செய்யவில்லை.

ஹிண்டன்பர்க் அறிக்கையின் போது நாடாளுமன்றத்தில் அதானி குறித்து விவாதிக்க வேண்டும் என்று எதிர்கட்சிகள் எழுப்பிய வேண்டுகோளை ஏற்கவில்லை மோடி.

உச்ச நீதிமன்றத்தின் நீதிபதி சந்திரசூட் செபியிடம் விசாரிக்கச் சொல்லி இருந்தாலும், செபி இது குறித்து ஒன்றுமே செய்யவில்லை என்று கூறியிருக்கிறார் பிரசாந்த் பூஷன்.

சி.ஏ.ஜி அறிக்கையின் மூலம் மோடி அரசு 7லட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபா ஊழல் செய்திருப்பதாக செய்தி வெளியானது. இது குறித்தும் ஒரு விளக்கம்கூட மோடி தரவில்லை.

இப்படிக் கார்ப்பரேட் அதானி என்ற ஒரு தனிப்பட்ட நபருக்கு, மோடியின் நண்பருக்கு உதவுவதும், அதானியின் பெருந்தொகைக் கடனைத் தள்ளுபடி செய்வதும் நாட்டின் பொருளாதாரத்தைப் பலவீனப்படுத்தும். இதுவும் ஊழலின் வடிவம்தான்.

பிற அரசியல் கட்சிகளையும், பாஜக அல்லாத மாநில அரசுகளையும் ஊழல்மயப்படுத்திக் காட்டும் மோடியின் அரசு, ஊழலில் மலிந்து கிடக்கிறது என்பதை மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.

அடுத்த ஆண்டுத் தேர்தலில் இண்டியா கூட்டணி ஆட்சி அமையும் நிலையில் அதானி தொடர்புடைய ஊழல்கள் விசாரிக்கப்படும் என்று நம்பிக்கை தருகிறார் ராகுல் காந்தி. அதில் மோடியும் வருவார் என்று நம்புவோம்.

அந்த நல்ல நாளுக்காக இண்டியா கூட்டணியைத் தேர்ந்தெடுப்போம். பா.ஜ.க கூட்டணியைத் தோற்கடிப்போம்!

ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**
பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**
ஆசிரியர் குழு:
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**
வெளியீடு: திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

**சென்னை அன்பகத்தில் (9-10-2023) கருத்தரங்கம்! தோழர்கள் திராவிடமணி, வந்தியத்தேவன், கமலக்கண்ணன்.**






# சனாதனத்தைச் சாய்த்த சார்ல்ஸ் டார்வின் (2)

பேராசிரியர் சுப.வீரபாண்டியன் தொகுப்பு : மதிவாணன்

சார்லஸ் டார்வின் அவர் துணைவியாருடன் ஆழமான அன்பு வாழ்வில் இருந்தவர். ஒரு முறை அவர் துணைவியார், ஒருயிர்ச் செல்-பெருகி இப்படி ஆனாது என்றால், அந்த ஒருயிர்ச் செல்லை யார் படைத்தார் என்று டார்வினிடம் கேட்கிறார். ஒரு செல் என்றால், ஒரே நேரத்தில், ஒரு செல் உயிரிகள் பல தோன்றி அடுத்த அடுத்த கட்டமாக மாறுகின்றது. உயிர் என்பதே இயக்கம் தானே தவிர வேறு ஏதும் இல்லை என்றார். அப்படி என்றால் உயிர் இல்லை, கடவுள் இல்லை என்று சொல்ல வருகின்றாயா என்ற தன் துணைவியாரின் கேள்விகள் மிக சிக்கலானது என்று குறிப்பிடுகின்றார். ஆன்மாவை மறுப்பது தான் திராவிட இயக்கமும். ஒருமுறை பெரியார் கடிகாரத்திற்கு சாவி கொடுத்தால் ஓடுகின்றது. கடிகாரம் நின்ற பிறகு சாவி கொடுத்தாயே அது எங்கே என்று கேட்டால் என்ன சொல்வது? அதுபோல் தான் உடல் இயங்கும் வரையில் உயிர்ப்புடன் இருக்கின்றது. இயக்கம் நின்றவுடன் இறக்கின்றது. ஆன்மா என்று எல்லாம் ஒன்றும் இல்லை என்றார்.



சார்லஸ் டார்வின்

உலகம் முழுவதும் எதிர்ப்புகள் வந்தாலும், 170 ஆண்டுகளுக்குப் பிறகு இங்கிலாந்தில் எங்கோ பிறந்த டார்வினைக் குறித்து மதுரையிலே இங்கே நாம் பேசிக்கொண்டு இருக்கிறோம் என்றால் டார்வின் இன்னமும் வாழ்ந்துகொண்டு இருக்கின்றார் என்பது தான் அதன் பொருள். அத்தனை புரட்சிகரக் கண்டுபிடிப்பு டார்வினுடையது. இத்தனைக் கண்டுபிடிப்புகளுக்கு பிறகும் மதம் அசையாமல் இருக்கின்றது. இதனை இங்கர்சால்தான் சொல்வார், எத்தனை காலத்திற்கு மனிதனுக்கு அச்சமும், அறியாமையும் இருக்கின்றதோ, அத்தனைக் காலத்திற்கு கடவுளும், மதமும் இருக்கும் என்று. கடவுளுக்கு எதிராக டார்வின் எந்த எண்ணமும் கொள்ளவில்லை, ஆனால் அவர் ஆய்வு முடிவுகள் கூறும் உண்மைகள் அப்படி ஆகின்றன.

நம்ம ஆளுங்க தஞ்சை பெரிய கோயிலில் அர்ச்சனை செய்வார்கள், வேளாங்கண்ணியில் மெழுகுவர்த்தி ஏற்றுவார்கள், நாகூரில் சர்க்கரை வாங்கிக் கொடுத்துவிட்டுப் போவார்கள். எந்தக் கடவுளுடனும் பிரச்சனை வேண்டாம் என்று நினைப்பவர்கள். கடவுள் இருக்கா? இல்லையா? என்று கேட்டால் ஒருவேளை இருந்துவிட்டால் உன் பேச்சைக் கேட்டு நானும் இல்லை என்று கூறி மாட்டிக்கொள்ளவா? கடவுள் இருந்துவிட்டுப் போகட்டுமே என்று கூறுவது ஒருவித அச்சத்தின் காரணமாகத்தான். அதனால்தான் அதற்கு பயபக்தி என்று பெயர்.

ஆனால் லமக்கின் சொற்களை எடுத்து டார்வின் சொல்கிறார், இயற்கை சிலவற்றை மன்னிப்பதே இல்லை; பொருளையும் நேரத்தையும் விரயம் செய்யும். எதையும் இயற்கை மன்னிப்பதே இல்லை. மதம் உங்கள் செல்வத்தையும் நேரத்தையும் விரயம் செய்கின்றது. மிக துருவத்தில் இருப்பவர்களை இயற்கை தாங்கிக் கொள்வதில்லை. அடிமுட்டாளும் அதிபுத்திசாலி என்ற நினைப்பும் ஆகாது. புத்தர் சொன்னதைப் போல நடுப்பாதையில் நட. இயல்பாக இரு. மிகக் கடினமானது இயல்பாக இருப்பது தான். மத அடிப்படையில் நாம் செய்யும் செலவுகள், திருமணத்தின் செலவுகள், நடுத்தர மக்கள் தன் வாழ்நாள் சேமிப்பையே அதற்கு விரயம் செய்கிறோம். இயற்கை மன்னிக்காது. பெரியாரின் சுயமரியாதைத் திருமணம் என்பது சிக்கனத் திருமணம். நேர மேலாண்மை என்பது மிக முக்கியமானது. நேர விரயத்தை இயற்கை மன்னிக்காது என்கிறார் டார்வின். எல்லாவற்றையும் மீண்டும் பெற முடியும். ஆனால் இழந்த காலத்தைப் பெற முடியாது.

முதலில் சொன்ன ஒன்றிக்கு விடை சொல்லி முடிக்கின்றேன். குரங்கில் இருந்து வந்தவன் மனிதன் என்று டார்வின் சொல்லவில்லை. மாறாகக் குரங்கு மனிதன் போன்றவை ஒரு மூதாதையிடம் இருந்து வந்து இருக்க வேண்டும். அந்த உயிரினம் இப்பொழுது இல்லை. அது பல விதத்தில் தன்னை தகவமைத்துக் கொண்டதால் தான் நாம் வந்து இருக்கிறோம். மனிதனுக்கு என்று தனிச் சிறப்பெல்லாம் இல்லை. நாமும் ஒரு உயிரினம் தான் என உணர்ந்து, மற்ற உயிரினங்களுடனும் அன்பாக இருப்போம். வள்ளலாரின் 200 ஆம் ஆண்டில் நாம் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். உலகில் எந்த நாடும் வல்லரசாக வருவதை நாம் ஏற்கக்கூடாது, நல்ல அரசாக இருக்க வேண்டும். போரற்ற உலகம் தான் வேண்டும். உயிர்களின் மீது அன்புதான் வேண்டும். அன்பே சிறந்தது. எந்த உயிரும் உயர்ந்ததும் இல்லை, தாழ்ந்ததும் இல்லை. அன்பும் நட்பும் மனிதநேயமும் உடைய மனிதர்களாக வாழ்வோம் நன்றி.

(நிறைவடைந்தது) ●




Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian